# 71ஆம் ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

**02-11-2024 சனி முதல் 10-11-2024 ஞாயிறு முடிய**



விழா நடைபெறும் இடம்:

ஸ்ரீ ஸத்யாநந்தா யோகா மையம்
No. 4, T. P. கோயில் 2ஆவது சந்து,
ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- மஹா ருத்ரம்
- ஆறுமுக லக்ஷார்ச்சனை/த்ரிசதி
- திருப்புகழ், பக்திப் பாடல்கள்
- சொற்பொழிவு / உபன்யாஸம்
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- ஸ்ரீ அருணகிரிநாதர் விழா
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்
- விடையாற்றி உற்சவம்

71ஆவது ஆண்டு
ஷஷ்டிப் பெருவிழா

சென்றே இடங்கள் கந்தா! எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்


## முருகன் திருவருட் சங்கம் (Regd)

101 /50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
தொலை பேசி : 044-2854 4713

குரைக் கரும்கடல் திருஅணை என முனம்
அடைத்(து) இலங்கையின் அதிபதி நிசிசரர்
குலத்தொடும்பட ஒருகணைவிடும் அரி மருகோனே!

(வடத்தை திருப்பரன்குன்றம் - திருப்புகழ்

# 71ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா




**02.11.2024 சனிக்கிழமை முதல்**
**10.11.2024 ஞாயிற்றுக்கிழமை முடிய**

விழா நடைபெறும் இடம்

## ஸத்யாநந்தா யோகா மையம்

4, T.P. கோயில் 2ஆவது சந்து
ஐஸ்ஹவுஸ், திருவல்லிக்கேணி
சென்னை 600 005
கைப்பேசி 98417 38069

**முருகன் திருவருட் சங்கம்** (Regd.,)
Society Regn. No. 137/2024
101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005
☎ 044 2854 4713

---

ஒலிக்கின்ற கரிய கடலின் கண் அணைகட்டி இலங்கையின்
அரசனான இராவணனை இரவில் உலாவுகின்ற அரக்கர்
கூட்டத்துடன், அழியும்படி ஓர் அம்பை விடுத்த நாராயணருடைய
(ஸ்ரீராமனின்) திருமருகரே!

அரிய தன் படைக்கர்த்த(ர்) என்று
அசுரர் த(ம்) கிளைகட்டை வென்ற
அரி முகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே!
**(கருவடைந்து-திருப்பரன்குன்றம்-திருப்புகழ்)**

# முருகன் திருவருட் சங்கம் (Regd.,)

Society Regn. No. 137/2024

ஸ்தாபிதம்: 1954 ☎ 044-28544713

## நிகழ்ச்சி நிரல்

02.11.2024 சனிக்கிழமை முதல் 07.11.2024 வியாழக்கிழமை முடிய ஆறு தினங்கள் காலையில் 7.00 மணி முதல் பிற்பகல் வரை ஸ்ரீவள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளுடன், ஆறுமுகங்களுக்குரிய லக்ஷார்ச்சனைகளும், 07.11.2024 வியாழக்கிழமை **"மஹா ஸ்கந்த ஷஷ்டி"** அன்று காலை ஏகாதச ருத்ர ஜபமும், மஹா ருத்ர ஹோமமும், கலசாபிஷேகமும், குமாரபோஜனமும், அன்னதானமும், அன்று மாலை த்ரிசதி அர்ச்சனையும், 02.11.2024 முதல் 08.11.2024 முடிய அனைத்து நாட்களிலும் மாலையில் ருத்ர/வேத பாராயணமும், திருப்புகழ், பத்திப் பாடல்கள் இன்னிசையும், உபன்யாஸம், சொற்பொழிவுகளும் **02.11.2024** சனியன்று மாலை **விழா மலர்** வெளியீடும் 03.11.2024 ஞாயிறு அன்று காலை சங்கத்தின் **அருணகிரிநாதர்** விழாவும், 08.11.2024 வெள்ளி அன்று காலை அஷ்டபதி மற்றும் திருப்புகழில் **"ஸ்ரீதேவசேனா வள்ளி கல்யாண வைபவமும்"** மற்றும் 09.11.2024, 10.11.2024 ஆகிய தினங்களில் **விடையாற்றி உற்சவமும்** நிகழ்ச்சி நிரலில் கண்ட வண்ணம் நடைபெற உள்ளன.

அன்பர்கள் யாவரும் சங்கத்தின் **71ஆவது** ஆண்டின் **ஸ்கந்த ஷஷ்டி பெருவிழா** நிகழ்ச்சிகள் அனைத்திலும் குடும்பத்துடன் கலந்து கொள்வதுடன் **தங்களால் இயன்ற அளவு அரிசி, பருப்பு மற்றும் பொருளுதவிகளை தாராளமாக மனமுவந்து அளித்து,** விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் செவ்வனே சிறக்க தங்கள் மேலான பேராதரவினை அளித்து, ஸ்ரீவள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமியின் திருவருளுக்குப் பாத்திரமாகி, அவனருளால் இல்வாழ்க்கையில் எல்லா நலன்களையும், வளங்களையும் அடையப்பெற்று இகபர சௌபாக்கியத்துடன் வாழ **முருகன் திருவருட் சங்கம்** பிரார்த்திக்கின்றது.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

நர சிரேட்டர்களை அரிய சேனைகளாகவும், சேனாதிபதியாகவும் கொண்டு இராவண கும்பகர்ணாதி அசுரர்களின் கூட்டத்தை அழித்து வெற்றி பெற்ற ஹரிமுகுந்தனாகிய இராமச்சந்திரமூர்த்தி மெச்சத் தகுந்த சிறந்த குணங்களை உடைய மருமகனாக எழுந்தருளினவரே!

முனைச் சங்(கு) ஒலிடு நீல மகா(உ) ததி
அடைத்து (அ)ஞ்சாத இராவண(ன்)நீள் பல
முடிக்கு(அ)ன்று ஓர் கணை ஏவும் இராகவன் மருகோனே!
(அனிச்சம்-திருச்செந்தூர்த்-திருப்புகழ்)

## 02.11.2024 சனிக்கிழமை

### 1. (வீரவாகுத் தேவர் நாள் நவவீரர்கள்)

சூரவாகுலம் ஒழிந்துநற் சுரர்முதற் பலரும்
ஆரவாகுறு வாழ்வுறப் பரம்பரன் அருளால்
ஏரவாகுறு மாணிக்கம் எனுமினாள் பயந்த
**வீரவாகு**வின் விரைமலர்ச் சேவடி பணிவாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.00 மணி | **கணபதி ஹோமம்** |
| காலை 08.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் கலசஸ்தாபனம் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஈசானமுக (மேல்நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 03.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை | **மஹா ருத்ர பாராயணம்** |
| மாலை 05.05 மணி முதல் இரவு 07.00 மணி வரை | **ஷஷ்டி விழா மலர் வெளியீடு திருப்புகழ்த் திரட்டு (Volume No.2)** |
| இறை வணக்கம் | **ஸ்ரீமதி பவ்யா ஹரிசங்கர்** ஸங்கீத விதூஷிணி M.A. Music |
| வரவேற்புரை | **ஸ்ரீ ஸ்ரீதரன் S** சென்னை 600 028 |
| தலைமை உரை | **கணேசன் V** தலைவர் முருகன் திருவருட் சங்கம் சென்னை 600 005 |

---

போருக்குரிய சங்குகள் ஒவென்று ஒலித்துக் கொண்டிருக்கும் நீல நிறத்தை உடைய பெரிய சமுத்திரத்தை அடைத்து அணைகட்டி பகைவர்களுக்குப் பயப்படாத இராவணனது உயர்ந்த மணி மகுடம் தரித்த பல தலைகளையும் அறுப்பதற்கு அந்நாளில் ஒரே ஒரு அம்பினை விடுத்த ஸ்ரீ இராமபிரானது மருமகனாக விளங்குபவரே!

திருக்கு(ம்) தாபதர் வேதியர் (ஆ)தியர்
துதிக்குந் தாளுடை நாயகன் (ஆ)கிய
செகச் செஞ்சோதியும் (ஆ)கிய மாதவன் மருகோனே!
(உருக்கம்-திருச்செந்தூர்த்-திருப்புகழ்)

| | |
|---|---|
| விழாவிற்கு தலைமை ஏற்று உரையாற்றி மலரினை வெளியிட்டு சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்குபவர் | திருப்புகழ் அமுதன் வலையப்பேட்டை<br>**ஸ்ரீ ரா. கிருஷ்ணன்** அவர்கள்<br>சென்னை 600 020 |
| சிறப்பு விருந்தினர்கள் | **Dr.V.R. ஜானகி** M.D.,D.D., M.N.A.M.S.,<br>Consultant Dermatologist<br>Prof. & HOD of Dematology (Retd)<br>Madras Medical College, Chennai |
| | **Dr. சங்கர் குமார்** (ENT Surgeon)<br>Suraksha ENT Care Centre, Nandala Medical Foundation, Chennai 600 018 |
| விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பிப்பவர் | ப்ரவசன ஸுதா வாணி<br>**ப்ரும்மஸ்ரீ ஸுந்தர்குமார்** அவர்கள் |
| விழாவிற்கு முன்னிலை வகித்து மலரின் பிரதிகளை வழங்கி கௌரவிப்பவர் | **திருப்புகழ் இசைவாணர்**<br>**ஸ்ரீ V. லக்ஷ்மிநாராயணன்** A.M. I. E., M.S., |
| மலரினைப் பெறுநர்கள் | **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யன் S.** B.A. (Hons)<br>சென்னை 600 017<br>**ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் N.**<br>பங்களூரு<br>**ஸ்ரீ வேங்கடராமன் V.**<br>உபதலைவர் முருகன் திருவருட் சங்கம்<br>சென்னை 600 106<br>**ஸ்ரீ மோகன் S.** F.C.A (Auditor)<br>சென்னை 600 018<br>**ஸ்ரீ கணேஷ்ராமன் M.** (Retd.Manager Quality Assurance DXE Tech, (Mridangam Artist)<br>சென்னை 600 026 |

அறிவுக் கண்ணுடன் விளங்கும் முநிவர்களும், வேதங்களை உணர்ந்த அந்தணர் முதலியவரும் துதிக்கும் திருவடிக் கமலங்களை உடைய தேவர்களுக்குத் தலைவரும், செவ்விய செகச் செஞ்சோதியாய் விளங்குபவருமாகிய நாராயணது மருகரே!

கறுக்கு(ம்) தூய மிடற்றன்(அ)ரும் சிலை
எடுக்கு(ம்) தோளன் நிறத்து அமர் எண் கரி
கடக்குந் தானவனைக் கொல்(அ)ரும் புயன் மருகோனே!
(நிறுக்கும்-திருச்செந்தூர்த்-திருப்புகழ்)

மலரினைப் பெறுநர்கள்

**ஸ்ரீ நாராயணன் V.P.** (Retd.Canara Bank)
சென்னை 600 004

**ஸ்ரீ சண்முகம் N.** (Retd.Amrutanjan Ltd., )
சென்னை 600 024

**ஸ்ரீ சங்கர ஸுப்ரஹ்மண்யன்** MRF
சென்னை 600 004

**ஸ்ரீ இராமமூர்த்தி V.** (Retd, Port Trust)
சென்னை 600 091

**ஸ்ரீ ஸ்ரீநிவாசன் K.R.** (Retd SBI)
சென்னை 600 018

**ஸ்ரீ ஸுந்தர் R.** (Retd SBI)
சென்னை 600 017

**ஸ்ரீ ராம்குமார் R.** M.Tech
சென்னை 600 020

**ஸ்ரீ விஸ்வநாதன் N.** B.E., (Senior Manager
Project Division (Retd) ABB Ltd, Baroda)

**ஸ்ரீ வத்ஸன் G.** B.E., EEE
Data Engineer, Walmart

**ஸ்ரீ M. ஜெயகோபால்**
ஸத்தியாநந்தா யோகா மையம், சென்னை5

**ஸ்ரீமதி. பவ்யா ஹரிசங்கர்** M.A. (Music).,
ஸங்கீத விதுஷினி, சென்னை 600 020

**ஸ்ரீமதி. சிவப்ரியா,** திருச்சி

**குமாரி வைஷ்ணவி லக்ஷ்மீ நாராயணன்**
சென்னை 600 018

**குமாரி ஸகுணா சந்த்ரசேகர்**
**குமாரி ஸ்ரீதன்யா சந்த்ரசேகர்**
சென்னை 600 086

---

கரிய நிறம் பொருந்திய தூய்மை மிக்க நீல கண்டத்தை உடைய சிவ பெருமானுடைய அருமையான திருக் கயிலாய மலையை எடுத்த வலிமை பொருந்திய தோள்களை உடையவனும், மார்பில் கொம்புகளால் குத்திய எட்டுத் திசைகளின் யானைகளை வென்றவனும் ஆகிய இராவணனைக் கொன்ற அரிய நீலமேக வண்ணராகிய நாராயணனின் திருமருகரே!

தீ இசைந்து (எ)ழவே (இ)லங்கையில்
ராவணன் சிர(ம்) அரிந்து (அ)வர்
சேனையும் செலமாள வென்றவன் மருகோனே!

**(வேயிசைந்தெழு-ஆவினன்குடித்-திருப்புகழ்)**

---

| | |
|---|---|
| நன்றியுரை | **ஸ்ரீ S. மோகன்** F.C.A., (Auditor)<br>சென்னை 600 018 |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.45 மணி முதல் | ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய<br>ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் உபன்யாஸம்<br>நிகழ்த்துபவர் ப்ரவசன ஸுதா வாணி<br>ப்ரும்மஸ்ரீ **B. ஸுந்தர் குமார்** அவர்கள் |

## 03.11.2024 ஞாயிற்றுக்கிழமை

### 2. வீரகேசரித் தேவர் நாள்

கோரகேசரி முகன் முதல் அசுரராம் கொடியோர்
சேரகேடுற மதிமுடிச் செழுஞ்சுடர் அருளால்
மார கேதன மணிவிழித் தரளமான் பயந்த
**வீரகேசரி** விரைமலர்ச் சேவடி பணிவாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத்புருஷமுக (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா**<br>**திருப்புகழ் பஜனை வழிபாடு**<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்**<br>**(51 திருப்புகழ், அநுபூதி, அலங்காரம்** மற்றும் **திருவகுப்பிலிருந்து சில பாடல்கள்)** |
| பிற்பகல் 03.30 மணி முதல்<br>மாலை 05.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |

---

நெருப்பு பற்றி எழுமாறு, இலங்காபுரியில், இராவணனுடைய தலைகள் அற்று விழவும், அவனுடைய சேனைகள் தொலைந்து அழியவும் வென்ற நாராயணருடைய திருமருகரே!

கண்டு மகிழ்ந்து (அ)ழகாய் இருந்து இசை
கொண்டு விளங்கிய நாளில் (அ)ன்பொடு
கண் குளிரு(ம்) திருமால் மகிழ்ந்து அருள் மருகோனே!
(வஞ்சனை-திருஆவினன்குடித்-திருப்புகழ்)

| | |
|---|---|
| மாலை 05.35 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**குமாரி M.S. பாரதி** மற்றும்<br>**ஸ்ரீ S. ஸ்ரீவர்தன்**<br>**ஸ்ரீ C. சங்கர்** – வயலின்<br>**ஸ்ரீ B. ஸத்யவாகீஸ்வரன்** – மிருதங்கம் |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.45 மணி வரை | **ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் உபன்யாஸம்**<br>நிகழ்த்துபவர் **ப்ரவசன ஸுதா வாணி**<br>**ப்ரும்மஸ்ரீ B. ஸுந்தர்குமார்** அவர்கள் |

## 04.11.2024 திங்கட்கிழமை

### 3. வீர மகேந்திரத் தேவர் நாள்

பாரமகேந் திரம் இரியப் படிற்றவுணர் குலம் ஒழியப்
பயந்தீர்ந் தின்பம், ஆரமகேந் திரன் அமரர் உயிர்வாழ
அறுமுகற்கோர் துணைவன்ஆகிச் சேரமகேந் திரம்
அணுகச் சிவன் அருளால் திகழ்பதும ராசிபெற்ற, **வீர**
**மகேந்திரன்** கமல பதமதனை நினைந்துவரு வினையை வெல்வாம்
(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து தக்ஷிண (தெற்கு நோக்குதல்) அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 03.30 மணி முதல்<br>மாலை 05.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |

---

உலகில் தருமமுறை நிலைபெறும்படி செய்து அதனால் மகிழ்ச்சி அடைந்து, அழகாக இருந்து வேணுகானம் இசைத்து அக்காலத்தில் உயிர்களிடம் அன்போடு கருணை கொண்டு கண்கள் குளிர்ந்தவருமாகிய நாராயணமூர்த்தி மனம் மகிழ்ந்து அருள்கின்ற திருமருகரே!

வாரும்(எ)னவே ஒருவர் நோகாமல் (ஆ)லவிடம்
ஈசர் பெறுமாறு உதவியே தேவர் யாவர்களும்
வாழ அமுத தேபகிரும் மாமாயனார் இனிய மருகோனே!
**(தோகை மயிலே-திருப்பழநித்-திருப்புகழ்)**

---

| | |
|---|---|
| மாலை 05.35 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீமதி வசுமதி தேசிகன்** மற்றும்<br>**ஸ்ரீமதி சங்கரி பரத்வாஜ்**<br>**ஸ்ரீ விஜய கணேஷ்** – வயலின்<br>**ஸ்ரீ குருராகவேந்திரா** – மிருதங்கம் |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.45 மணி வரை | **ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் உபன்யாஸம்**<br>நிகழ்த்துபவர் **ப்ரவசன ஸுதா வாணி**<br>**ப்ரும்மஸ்ரீ B. ஸுந்தர்குமார்** அவர்கள் |

## 5.11.2024 செவ்வாய்க்கிழமை

### 4. வீர மகேந்திரத் தேவர் நாள்

வெந்திறலார் அவுணர்எலாம் வீறழிந்து நீறுபட விபுதர்
வாழ, வந்தருளும் வேற்றுடக்கை மாமுருகற் கொருதுணை
யாய் மணியார் கண்டத் தெந்தைபிரான் திருவருளால்
கோமேத மாமணியாம் எழில் மடந்தை, தந்தருளும்
**வீரமகே சுரன்**கமல பதமதனைச் சரணம் செய்வாம்.

(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து உத்தர (வடக்கு நோக்குதல்) வாமதேவமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 03.30 மணி முதல்<br>மாலை 05.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |

---

வாருங்கள் என்று கூறி ஒருவரும் மனம் வருந்தாவண்ணம் ஆலகால விடத்தைச் சிவபெருமான் பெறும்படி தந்து, தேவர்கள் அனைவரும் அமுதத்தைப் பங்கிட்டு வழங்கிய பெருமை மிகுந்த நாராயணமூர்த்தியின் இனிமையான திருமருகரே!

ஆதி நாரணன் ந(ல்) சங்க பாணிய(ன்)
ஓதுவார்க(ள்) உளத்து அன்பன் மாதவ(ன்)
ஆன நான்முகன் ந(ல்) தந்தை ஸ்ரீதரன் மருகோனே!
(பாரியான-திருப்பழநித்-திருப்புகழ்)

| | |
|---|---|
| மாலை 05.35 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீமதி திவ்யா சந்திரமௌலி**<br>**ஸ்ரீமதி T.R. பிரதீபா**<br>**ஸ்ரீ G. ஸ்ரீவத்ஸன்** – ஹார்மோனியம்<br>**ஸ்ரீ B. ஸத்யவாகீஸ்வரன்** – மிருதங்கம் |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.45 மணி வரை | **ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் உபன்யாஸம்**<br>நிகழ்த்துபவர் **ப்ரவசன ஸுதா வாணி**<br>**ப்ரும்மஸ்ரீ B. ஸுந்தர்குமார்** அவர்கள் |

## 6.11.2024 புதன்கிழமை

### 5. வீர புரந்தரத் தேவர் நாள்

சூராபுரம் துகளாகத் தொல் அவுணர் குல(ம்)
மாளத் துயர்தீர்ந் தின்பம், சேரபுரந் தரன் அமரர்
வாழவரு துணைவன் ஆகச், சேய்தனத்கோர் சோர
புரம் பொடித்தபிரான் அருளால்வை டூரியப்பைந்
தொடியாள் பெற்ற, **வீரபுரந் தரன்**கமல பதமதனை
வணங்கிவரு வினையை வெல்வாம்.

(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை**<br>**தொடர்ந்து ஸத்யோஜாதமுக**<br>**(மேற்கு நோக்குதல்)**<br>**ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |

முதன்மை உடைய நாராயணரும், பாஞ்சஜன்யம் என்ற நல்ல சங்கினை ஏந்திய திருக்கரம் உடையவரும், அருட்பாடல்களை ஓதுகின்றவர்களுடைய உள்ளக்கோயிலில் வீற்றிருக்கும் அன்பரும், மாதவரும், படைப்புத் தலைவரான பிரம்மதேவருக்குப் பிதாவாக விளங்குபவரும் மார்பில் இலக்குமியைத் தரித்தவருமாகிய திருமாலின் திருமருகரே!

திகிரி வளை கதை வசி தனு உடையவ(ன்)
எழிலி வடிவினன் (அ)ரவு பொன் முடிமிசை
திமித திமிதிமி என நடமிடு(ம்) அரி மருகோனே!
(தகர நறுமலர்-திருப்பழநித்-திருப்புகழ்)

| | |
|---|---|
| பிற்பகல் 03.30 மணி முதல்<br>மாலை 05.30 மணி வரை | **ஸ்ரீ மஹா ருத்ர பாராயணம்** |
| மாலை 05.35 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ், பக்திப்பாடல்கள் இன்னிசை**<br>**குமாரி S. அமிர்தவர்ஷிணி**<br>**ஸ்ரீ S. ஹரீஷ்** – ஹார்மோனியம்<br>**ஸ்ரீ S. கிருஷ்ணன்** – மிருதங்கம் |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.45 மணி வரை | **ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் உபன்யாஸம்**<br>நிகழ்த்துபவர் **ப்ரவசன ஸுதா வாணி**<br>**ப்ரும்மஸ்ரீ B. ஸுந்தர்குமார்** அவர்கள் |

**மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா**

**7.11.2024 வியாழக்கிழமை**

**6. வீர ராக்கதத் தேவர் நாள்**

கிலிதுறந்து புரந்தரன்வா னவர்வாழக் கிரிமுதலாய்
அவுணர் ஈட்டம், நலிவடைந்து நீறுபட வருகந்த
நாயகற்கோர் துணைவன் ஆகப், பொலிவுறுநல் வயிர
மெனும் பூங்கொடியாள் பொருப்புவில்லி அருளாற்
பெற்ற, வலமிகுந்த புயவீர **ராக்கதன்**செங் கமலபத
வணக்கம் செய்வாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம்**<br>**ஸ்ரீ மஹா ருத்ர ஜபஹோமம் பூர்த்தி,**<br>**கலசாபிஷேகம் தொடர்ந்து அதோமுக**<br>**(கீழ் நோக்குதல்)**<br>**ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |

சக்கரத்தையும், சங்கையும், கதாயுதத்தையும், வாளாயுதத்தையும், வில்லையும் ஆகிய ஐம்படைகளை உடையவரும், நீலமேகத் திருமேனியைக் கொண்டவரும், காளிங்கன் என்னும் பாம்பினுடைய பணாமகுடத்தின் மீது நின்று, திமித திமிதிமி என்ற ஒலியுடன் திருநடனமிட்டருளியவரும், பாவத்தை நீக்குபவருமாகிய நாராயணமூர்த்தியின் திருமருகரே!

வரித்தர(ம்) துளவு அணி திரு மருவிய
(உ)ரத்த பங்கயர் மரகத(ம்) அழகிய
வணத்தர்(அ)ம்பரம் (உ)றவிடு கணையினர் மருகோனே!
(விரித்த-சுவாமிமலைத்-திருப்புகழ்)

| | |
|---|---|
| பிற்பகல் 01.30 மணி | **லக்ஷார்ச்சனை பூர்த்தி, குமார போஜனம் அன்னதானம்** |
| பிற்பகல் 03.30 மணி முதல் மாலை 04.45 மணி வரை | **திருப்புகழ், பக்திப் பாடல்கள் இன்னிசை ஸ்ரீமதி கோமதி ஸ்ரீ குழுவினர்** |
| மாலை 05.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை | **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை ஆறுவிதமான மலர்களுடன், ஆறுவித நிவேதனங்கள் படைப்பு** |
| இரவு 07.05 மணி முதல் இரவு 08.45 மணி வரை | **ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் உபன்யாஸம்** நிகழ்த்துபவர் **ப்ரவசன ஸுதா வாணி ப்ரும்மஸ்ரீ B. ஸுந்தர்குமார்** அவர்கள் |
| இரவு 08.50 மணி முதல் இரவு 10.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் வேல் மாறல் பாராயணம் முருகன் திருவருட் சங்கத்தினர்** |




---

வரிசையாக வண்டுகள் உறையும் துளப மாலை அணிந்தவரும், இலக்குமி வாழும் மார்பில் தாமரை மலரை அணிந்தவரும், மரகதத்தின் அழகிய நிறம் உடையவரும், கடல்மீது விடுத்த கணையை உடையவருமாகிய திருமாலின் மருகரே!

பகைத்த அரக்கர்கள் யமன்(உ)லகு உற அமர்
தொடுத்த சக்கிர வளைகரம் (அ)ழகியர்
படிக்கடத்தையும் வயிறு (அ)டை நெடியவர் மருகோனே!
(தொடத்து-திருத்தணித்-திருப்புகழ்)

## 8.11.2024 வெள்ளிக்கிழமை

### 7. வீரமார்த்தாண்ட தேவர் நாள்

உரகதலம் முதலாய உம்பர்தலம் அத்தனையும்
உறுகண் நீங்கி, அகரஎன் றேத்தெடுப்ப அசுரர்குலம்
நீறுபட அடல்வேல் வீசும், கரகமலக் கந்தவேட் கொரு
துணையாய்க் கண்ணுதலான் கருணை நோக்கால், மரகத
மின் அருள்**வீர மார்த்தாண்டன்** மலரடியை வணக்கம் செய்வாம்
(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **கீதகாங்கேய காவ்யம்** என்னும் **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அஷ்டபதி சிலவற்றுடன் திருப்புகழில் "ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்" ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர்** மற்றும் **முருகன் திருவருட் சங்கத்தினர்** |
| மாலை 04.00 மணி முதல்<br>மாலை 05.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 05.00 மணி முதல்<br>இரவு 07.00 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீமதி பவ்யா ஹரிசங்கர்** ஸங்கீதவிதூஷிணி M.A., Music<br>**ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணன்ஸுப்ரஹ்மண்யன்** – வயலின்<br>**ஸ்ரீ மயூர் ஹரிசங்கர்** – மிருதங்கம் |
| இரவு 07.05 மணி முதல்<br>இரவு 08.45 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**குமாரி ஆர்யா நாகராஜன்**<br>**ஸ்ரீ முகுந்தன் ஸாம்ராஜ்** – வயலின்<br>**ஸ்ரீ G.N. புவன்** – மிருதங்கம் |

பகைகொண்டு எதிர்த்த இராட்சதர்கள், இயமனுடைய நரகலோகத்தை அடையுமாறு, போரைத் தொடங்கிய, சக்கராயுதத்தையும், சங்கத்தையும் ஏந்திய திருக்கரத்தை உடையவரும், அழகுடையவரும், உலகையும் உலகிலுள்ள பொருள்களையும், திருவயிற்றில் அடக்கியவரும் நீண்ட திருமேனியை உடையவருமாகிய நாராயணமூர்த்தியின் மருகரே!

உலுத்த ராவணனைச் சிரம் (இ)ற்றிட
வதைத்து மா பலியைச் சிறை வைத்தவன்
உலக்கை ராவி நடுக்கடல் விட்டவன் மருகோனே!
(எலுப்பு நாடி-திருத்தணித்-திருப்புகழ்)

## விடையாற்றி உற்சவம்

## 9.11.2024 சனிக்கிழமை

### 8. வீராந்தகத் தேவர் நாள்

மத்துறுதண் தயிர்போலும் அலமந்த வானவர்தம்
வருத்தம் தீரச், சத்துருசங் காரவடி வேல்எறிந்த சண்
முகற்கோர் துணைவன் ஆகப், பத்தா உளங் களிகூர்க
கருணைமழை பொழிந்துவரும் பரமன் நோக்கால்
வித்துருமத் தவள் அருள்வீ **ராந்தகன்** தாள் வணங்கிவரு
வினையை வெல்வாம்

(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 08.00 மணி முதல்<br>காலை 10.00 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீலக்ஷ்மி நாராயணன்.V** A.M.I.E., M.S.<br>**முருகன் திருவருட் சங்கம்**<br>**ஸ்ரீ G. ஸ்ரீவத்ஸன்** – ஹார்மோனியம்<br>**ஸ்ரீ V. பிரஸன்னகார்த்திக்** – மிருதங்கம் |
| காலை 10.05 மணி முதல்<br>பிற்பகல் 12.05 மணி வரை | **ஸ்ரீ S. கோகுலகிருஷ்ணன்**–புல்லாங்குழல்<br>மேலக்காவேரி **ஸ்ரீ K. தியாகராஜன்** –வயலின்<br>**ஸ்ரீ S. ஸத்யநாராயணன்** – மிருதங்கம் |
| பிற்பகல் 12.10 மணி முதல்<br>பிற்பகல் 02.10 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>குமாரி **ப்ரியங்கா ஹரேஷ்**<br>குமாரி **ஸ்ரீலக்ஷ்மி பட்** – வயலின்<br>**ஸ்ரீ வம்சிதாரா ஆனந்த்** – மிருதங்கம் |
| பிற்பகல் 02.15 மணி முதல்<br>மாலை 04.15 மணி வரை | **பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி** – கீபோர்டு<br>**ஸ்ரீ இராமகிருஷ்ணன்** – தபேலா<br>குமாரி **பூர்ணிமா கிருஷ்ண ஈமணி** – புல்லாங்குழல்<br>குமாரி **T.B. ஜனனி** – வீணை |

---

ஆசை உடைய இராவணனுடைய தலைகள் அற்று விழுமாறு செய்து, அவனை வதைத்து, மகாபலிச் சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்தவரும், இரும்பு உலக்கையைப் பொடி செய்து கடலில் எறிந்தவருமாகிய திருமாலின் திருமருகரே!

காந்தள் மலர்த்தொடையிட்டு (எ)திர்விட்டு ஒரு
வேந்து குரக்கு (அ)ரணத்தொடும் (அ)ட்டிடு
காண்டிப அச்சுதன் (உ)த்தம சற்குணன் மருகோனே!
**(கூந்தலவிழ்த்து-திருத்தணித்-திருப்புகழ்)**

---

| | |
|---|---|
| மாலை 04.20 மணி முதல்<br>மாலை 06.20 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>ஸ்ரீமதி **பவதாரிணி அனந்தராமன்**<br>ஸ்ரீமதி **மீரா ஸுந்தர்** – வயலின்<br>**ஸ்ரீ B. ஸ்ரீராம்** – மிருதங்கம் |
| மாலை 06.25 மணி முதல்<br>இரவு 08.25 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>ஸ்ரீமதி **ஸ்ருதி சங்கர் குமார்**<br>மும்பை **ஸ்ரீ மாதவன்** – வயலின்<br>**ஸ்ரீ அக்ஷய்ராம் R.** – மிருதங்கம்<br>**ஸ்ரீ ரங்கநாதன்** – கடம் |

## 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை

### 9. வீர தீரத் தேவர் நாள்

பொய்ஞ்ஞீதங் குடிகொண்ட அடல் அசுரர் பொடி
யாகப் புலவர் வாழ, மெஞ்ஞீதம் நடனமிட
வேலெறிந்த விடலைக்கோர் துணைவன்ஆக, மைஞ்ஞீல
கண்டத்து மகதேவர் திருவருளால் மழை மிழற்றும்
பைஞ்ஞீல மடமின் அருள் **வீரதீ** ரன்கழலைப் பணிந்து வாழ்வாம்
(சேய்த்தொண்டர் புராணம்)

| | |
|---|---|
| காலை 06.30 மணி | **சூரிய நமஸ்காரம்** |
| காலை 08.00 மணி முதல்<br>காலை 10.00 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீ கார்த்திக் கணேஷ்ராமன்**<br>**ஸ்ரீ T. ஸத்யமூர்த்தி** – மிருதங்கம்<br>**ஸ்ரீ G. ஸ்ரீவத்ஸன்** – ஹார்மோனியம் |

---

சுக்ரீவனுக்கு காந்தள் மலர் மாலையைச் சூட்டி, வாலிக்கு முன்னே போருக்கு அனுப்பி, ஒப்பற்ற குரங்கு அரசனாகிய வாலியை, அவன் கவசத்தோடு அழித்த காண்டீபம் என்னும் வில்லையேந்திய அச்சுதரும் உத்தமமான நற்குணம் பொருந்தியவருமாகிய ஸ்ரீ இராமபிரானுடைய திருமருகரே!

கனம்(உ)று ஆனை தேர் நுறுக்கி
தலைகள் ஆறு நாலு பெற்ற
அவனை வாளியால் (அ)டு அத்தன் மருகோனே!

**(துடிகொணோய்-பழமுதிர்ச்சோலைத்-திருப்புகழ்)**

| | |
|---|---|
| காலை 10.05 மணி முதல்<br>பிற்பகல் 12.05 மணி வரை | **ஸ்ரீ N.S. மணி அவர்கள் தலைமையில்**<br>**திருப்புகழ் இசைவழிபாடு**<br>**(திருப்புகழ் அன்பர்கள்)**<br>**ஸ்ரீமதி ஸ்ரீலக்ஷ்மி** – வயலின்<br>**ஸ்ரீ குருராகவேந்திரா** – மிருதங்கம் |
| பிற்பகல் 12.10 மணி முதல்<br>பிற்பகல் 02.10 மணி வரை | **திருப்புகழ், பத்திப்பாடல்கள் இன்னிசை**<br>**வில்லிவாக்கம் ஸ்ரீ S. ரகுராமன்**<br>மற்றும் **சிஷ்யர்கள் பஞ்ச வயலின் இசை**<br>குமாரி **ஸ்ருஷ்டி K.R.**<br>குமாரி **ப்ரிதிவ்யாசிவராமன்**<br>குமாரி **ஸுதீக்ஷா K.**<br>குமாரி **மித்ரா விஜய்**<br>நெய்வேலி **ராம்குமார்** – மிருதங்கம்<br>ஸ்ரீ **K.R. வெங்கடஸுப்ரஹ்மணியன்**<br>– (டிஜிடல் பேடு) Digital Pad |
| பிற்பகல் 02.15 மணி முதல்<br>மாலை 04.15 மணி வரை | திருமுறை இசை அரங்கம்<br>திருமுறைச் செல்வர் பேராசிரியர்<br>மடிப்பாக்கம் **ஸ்ரீ K.R. ஈஸ்வரன்** மற்றும்<br>பண்ணிசைச் செல்வி<br>**Dr. ஸ்ரீவித்யா சந்திரசேகர்**<br>**ஸ்ரீமுகுந்தன் ஸாம்ராஜ்** – வயலின்<br>**ஸ்ரீ B. ஸத்யவாகீஸ்வரன்** – மிருதங்கம் |
| மாலை 04.20 மணி முதல்<br>மாலை 04.30 மணி வரை | **விழா நிறைவு இசை**<br>**முருகன் திருவருட் சங்கத்தார்** |

---

போர்க்களத்தில் வந்த யானைகளையும், தேர்களையும் தூளாக்கி, பத்துத் தலைகளை உடைய இராவணனை அம்பினால் கொன்ற அண்ணலாகிய திருமாலின் திருமருகரே!

மறப்புரிசை வளையும் இலங்கை
அரக்கன் ஒருபது முடி சிந்த
வளைத்த சிலை விஜய முகுந்தன் மருகோனே!
**(கறுத்ததலை-திருவேங்கடம்-திருப்புகழ்)**

## தலைவர்

**ஸ்ரீ கணேசன் V.** அபிராமபுரம், சென்னை 600 018

## உபதலைவர்

**ஸ்ரீ வெங்கடராமன் V.** அரும்பாக்கம், சென்னை 600 106

## செயலர்

**ஸ்ரீ சந்த்ரசேகர் N.** திருவல்லிக்கேணி, சென்னை 600 005

## இணைச்செயலர்

**ஸ்ரீ ஸ்ரீதர் S.** மயிலை, சென்னை 600 004

**ஸ்ரீ ஜானகிராமன் V.** நுங்கம்பாக்கம், சென்னை 600 034

## பொருளாளர்

**ஸ்ரீ நாராயணன் V.P.** மயிலை, சென்னை 600 004

## செயற்குழு உறுப்பினர்கள்

**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யன் S.** தி.நகர், சென்னை 600 017


**ஸ்ரீ கணேஷ்ராமன் M.** வடபழநி, சென்னை 600 026

**ஸ்ரீ ஸ்ரீதரன் S.** மந்தைவெளி, சென்னை 600 028

**ஸ்ரீ மோகன் S.** அபிராமபுரம், சென்னை 600 018

வீரம் பொருந்திய மதில்கள் சூழ்ந்துள்ள இலங்கையில் வாழ்ந்த இராவணனுடைய பத்துத் தலைகளும் அற்று விழும்படி, கோதண்டத்தை வளைத்த, சிறந்த வெற்றி உடையவரும் ஆகிய நாராயணமூர்த்தியின் திருமருகரே!

ஆனைமுக வற்கு இளைய ஐயா! அருணகிரி
தேன் அனைய சொல்லால் திருப்புகழை - யான் நினைந்து
போற்றிடவும் நின்னை புகழ்ந்திடவும் பொற்கமலம்
சாத்திடவும் ஓதிடவும் தா.



ஆனை முகவனாம் கணபதிக்கு இளைய ஐயனே! அருணகிரி என்னும் தேன் போன்ற சொல்லானுடைய திருப்புகழ்ப் பாடல்களை நான் நினைந்து போற்றவும் அப்பாடல்களால் உன்னைப் புகழவும், உனது பொன்னார் திருவடியில் அப்புகழ்ப் பாக்களைச் சமர்ப்பிக்கவும் அழகிய தாமரை மலர்களால் பூஜிக்கவும், ஓதவும் வரம் தந்தருளுக.